**சுருக்கம்**

திரைப்படங்கள் - அரசுக்குச் சொந்தமான இடங்களில் தனியார்கள் படப்பிடிப்பு நடத்துதல் - படப்பிடிப்பு கட்டணங்களை திருத்தி அமைத்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**செய்தி மற்றும் சுற்றுலா (திதொ.2)த் துறை**

அரசாணை (நிலை) எண். 100
நாள் 5.6.2003

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.276, செய்தி மற்றும் சுற்றுலா, நாள் 7.10.1993
2. அரசாணை (நிலை) எண்.62, செய்தி மற்றும் சுற்றுலா, நாள் 10.4.2002

-----

ஆணை:

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணை மூலம் அரசுக்குச் சொந்தமான இடங்களில் தனியார்கள் படப்பிடிப்பு நடத்த செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர் மூலம் ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் முறை (Single Window System) நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

2. இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணை மூலம் அரசுக்குச் சொந்தமான இடங்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டு, வகை (1)இன் கீழ் வரும் இடங்களுக்கு ஒரு நாள் படப்பிடிப்புக் கட்டணமாக ரூ.2000/-மும் (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) வகை (2)இன் கீழ் வரும் இடங்களுக்கு ஒரு நாள் படப்பிடிப்புக் கட்டணமாக ரூ.1000/-ம் (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிர்ணயம் செய்யப்பட்டது.

3. தற்போது வசூலிக்கப்பட்டு வரும் படப்பிடிப்பு கட்டணங்களையும் படப்பிடிப்பு இடங்களையும் ஆய்வு செய்த அரசு படப்பிடிப்பு கட்டணங்களை பின்வருமாறு திருத்தியமைத்து ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| (அ) | இராஜாஜி மண்டபம், சென்னை | நாள் ஒன்றுக்கு ரூ.100000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) |
| (ஆ) | வகை - 1 | |
| 1. | இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத் | நாள் ஒன்றுக்கு |

| | | |
|---|---|---|
| | துறையின் கட்டுப்பாட்டில் உள்ள புராதன சின்னங்கள் | ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) |
| 2. | வள்ளுவர் கோட்டம் | |
| 3. | அரசு மனநல காப்பக நிறுவனம், அரசு மருத்துவமனைகள், அரசுப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள், பிரையண்ட் பூங்கா, கொடைக்கானல் சிம்ஸ் பூங்கா, குன்னூர், தேசியப் பூங்காக்கள், வன விலங்குகள், சரணாலயங்கள், புதிய கொத்தவால் சாவடி கோயம்பேடு, பனகல் கட்டிடம், சைதாப்பேட்டை ரிப்பர்மாளிகை, தாளமுத்து நடராசன் மாளிகை (எம்.எம்.டி.ஏ. கட்டிடம்), தோட்டக் கலை மற்றும் தோட்டப் பயிர்கள் இயக்குநரின் கீழ் உள்ளவை, கால்நடைப்பண்ணை, ஹெலிபேட், உதகமண்டலம் | |

**வகை - 2**

| | | |
|---|---|---|
| 1) | தலைமை வனக்காப்பளரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒதுக்கப்பட்ட வனப்பகுதிகள் | நாள் ஒன்றுக்கு ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) |
| 2) | இயக்குநர், மீன் துறையின் கீழ் உள்ள மீன் வளர்ச்சிப்பண்ணைகள் | |
| 3) | கடற்கரைகள், மெரினா கடற்கரை, பொது இடங்கள், பொதுப்பணித்துறையின் தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டிடங்கள் | |
| 4) | பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்ப்பாசன திட்டப் பகுதிகள் | |
| 5) | நெடுஞ்சாலைத் துறைத் தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டிலுள்ள நெடுஞ்சாலைகள், தெருக்கள் மற்றும் கட்டிடங்கள் | |
| 6) | சிறைத்துறை தலைவரின் கட்டுப்பாட்டிலுள்ள சிறைச்சாலைகள், மத்திய சிறைச்சாலைகள் (வெளிப்புறம் மட்டும்) | |
| 7) | மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொது இடங்களின் வகைபாட்டிற்குள் வராத இதர இடங்கள் பல்வகை இனங்களாக கருதப்படுபவை | |

4. மேலே பத்தி 3-இல் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ள படப்பிடிப்புக் கட்டணங்கள் இந்த அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வரும்.

5. இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா.எண் 1900/எப்எஸ்/பி/03, நாள் 3.6.2003 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வ. ராமதாஸ்
அரசுச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9
தலைவர், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, சென்னை-6
தலைவர், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், சென்னை-6
தலைவர், தென்னிந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பாளர்கள் சங்கம், சென்னை-17
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-9
மாநில கணக்குத் துறைத் தலைவர், சென்னை-9 / 18
அனைத்து தலைமைச் செயலக துறைகள், சென்னை-9
அனைத்துத் துறைத் தலைவர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாநகராட்சி ஆணையாளர்கள்

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
நிதித்துறை, சென்னை-9
செய்தி மற்றும் சுற்றுலாத்துறையின் அனைத்துப் பிரிவுகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்